## 11.8 குத்தகை – நகராட்சி மற்றும் பேரூராட்சிகளிலுள்ள அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டணக் கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற இனங்களில் கட்டணங்கள் வசூலிப்பதற்கான உரிமம் – குத்தகைக்கு விடுதல் குறித்து 2009–2010 ஆம் ஆண்டு திருத்திய நடைமுறைகள் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நிதி.4) துறை

அரசாணை (நிலை) எண்.181 நாள் : 19.9.2008

**ஆணை :**

நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் மன்றங்கள், தங்கள் அசையா சொத்துக்களான நிலங்கள் மற்றும் கட்டிடங்களை வாடகைக்கு விடுவதன் மூலமாகவும், அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள், வார சந்தைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவோரிடமிருந்து மன்றம் நிர்ணயித்த வீதங்களில் கட்டணங்களை வசூலிக்கும் உரிமையை ஏலம் விடுவதன் வாயிலாகவும் வருமானம் ஈட்டுகின்றன.

2) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலுள்ள அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், வார சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள், கட்டைவண்டி நிறுத்துமிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற இனங்களுக்கான கட்டண வசூல் உரிமையை ஏலம் விடும் முறையைப் பொறுத்த வரையில், பொதுவாகக் குத்தகைக் கால அளவை ஓராண்டாக நகர் மன்றங்கள் நிர்ணயிக்கின்றன. ஒவ்வோராண்டும் ஏலம் நடத்துவதில் பல்வேறு நிர்வாகப் பிரச்சினைகள் உள்ளதாலும், ஏலம் நடத்துவதில் ஏற்படும் கால தாமதத்தால் துறை மூலம் வசூல் (Departmental collections) செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்படுவதாலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. ஆரோக்கியமற்ற கூட்டு மற்றும் பகைமை காரணமாக ஏலம் விடும் சமயத்தில் பல உள்ளாட்சி அமைப்புகளில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளும் எழுகின்றன. டிசம்பரிலிருந்து மார்ச் வரை ஒவ்வோராண்டும் இவற்றைச் சமாளிப்பது மன்றத்திற்கும், அதிகாரிகளுக்கும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. குறிப்பாக பெரும் எண்ணிக்கையில் குத்தகை இனங்கள் உள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் நிர்வாகம் தங்கள் நேரத்தை இதற்காகவே செலவிடும் நிலை ஏற்படுகிறது.

3) எனவே நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலுள்ள அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற இனங்களில் கட்டணங்கள் வசூலிக்கும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்கான கால அளவு குறித்து அரசு நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் ஆணையர் ஆகியோருடன் கலந்தாலோசித்து ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில், மேற்குறிப்பிட்ட இனங்களுக்கான கட்டணங்கள் வசூலிக்கும் உரிமைக்கான குத்தகை கால அளவை நடைமுறையில் உள்ள ஓராண்டிற்கு பதிலாக, மூன்றாண்டு கால அளவிற்கு உயர்த்தி குத்தகைக்கு விடுவதில் பல அனுகூலங்கள் இருப்பதாக அரசு கருவதால், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளிலுள்ள அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற அனைத்து வருடாந்திர குத்தகை இனங்களிலும், கட்டணங்கள் வசூலிப்பதற்கான உரிமைக்கான குத்தகை கால அளவை தற்போது நடைமுறையிலுள்ள ஓராண்டிற்கு பதிலாக மூன்றாண்டுகளாக, 2009–2010 முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

i) ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாமாண்டில் 5% குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் தொகையில் 5% குத்தகை தொகை உயர்வும் செய்யலாம். உதாரணமாக 5% குத்தகை உயர்வுத் தொகை கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு அமையும்.

ஆரம்ப ஆண்டு குத்தகை தொகை ரூ. 100 என்றால் (ரூபாய் நூறு மட்டும்)

இரண்டாம் வருடத்திற்கான குத்தகை தொகை ரூ. 105 (ரூபாய் நூற்றி ஐந்து மட்டும்)

மூன்றாம் வருடத்திற்கான குத்தகை தொகை ரூ. 110.25 (ரூபாய் நூற்றி பத்து மற்றும் இருபத்து ஐந்து பைசா மட்டும்) ஆக இருக்கும்

ii) மூன்றாண்டுகளுக்கொரு முறை அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் ஆகிய இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமை பொது ஏலத்தில் விடப்பட வேண்டும்.

iii) மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரராக அவ்வுரிமத்தை பெறலாம். வாரிசுதாரருக்கு விருப்பம் இல்லையெனில், உரிமை மறு ஏலம் விடப்படலாம்.

iv) இவைகள் தவிர நகராட்சியிலுள்ள அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமைகளை குத்தகைக்கு விடுவதற்காக, ஏற்கனவே நடைமுறையில் உள்ள அனைத்து நிபந்தனைகளும் தொடரும்.

v) நகராட்சி மற்றும் பேரூராட்சிகள் வெளியிடும் ஆண்டுக் குத்தகை அறிவிக்கைகளில் குத்தகை நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை தக்கவாறு திருத்தியமைப்பதற்காக நகராட்சிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையரும், பேரூராட்சிகளுக்கு பேரூராட்சிகளின் ஆணையரும் ஆலோசனை அளிக்க வேண்டும். இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பல ஆண்டுகளுக்கு முன் வரையறுக்கப்பட்ட குத்தகைப் பத்திர படிவத்தை தற்கால மாற்றங்களுக்கேற்ப திருத்தி அமைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர்/பேரூராட்சிகளின் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

vi) மேற்சொன்ன நெறிமுறைகளை நகராட்சி நிர்வாக ஆணையர் / பேரூராட்சிகளின் ஆணையர் ஆகியோர் தவறாது வேண்டும் எனவும் இது குறித்து உரிய விதிகளை திருத்தியமைப்பதற்கான செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக ஆணையர்/பேரூராட்சிகளின் ஆணையர் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு. எண். 2810/FS/08, நாள் 1.9.08ல் அளித்த ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே. தீனபந்து**
அரசு முதன்மைச் செயலர்